# அனைத்து பாடங்களுக்கான முக்கிய குறிப்புகள்

## 1. இயக்க விதிகள்

❋ **நியூட்டனின் முதல் விதி (அ) நிலைம விதி :** ஒவ்வொரு பொருளும் புறவிசை ஏதும் செயல்படாத வரையில், தமது ஓய்வு நிலையிலோ (அ) சீராக இயங்கிக் கொண்டிருக்கும் நேர்க்கோட்டு நிலையிலோ தொடர்ந்து இருக்கும்.

❋ **நியூட்டனின் இரண்டாம் விதி (அ)விசையின் விதி :** பொருள் ஒன்றின் மீது செயல்படும் விசையானது அப்பொருளின் உந்த மாறுபாட்டு வீதத்திற்கு நேர்தகவில் அமையும். $F = ma.$

❋ **நியூட்டனின் மூன்றாம் விதி :** ஒவ்வொரு விசைக்கும் சமமான எதிர் விசை உண்டு.

❋ **நேர்க்கோட்டு உந்த அழிவின்மை விதி :** புற விசை ஏதும் தாக்காத வரையில் ஒரு பொருள் அல்லது ஓர் அமைப்பின் மீது செயல்படும் மொத்த நேர்க்கோட்டு உந்தம் மாறாமல் இருக்கும்.

❋ **நியூட்டனின் பொது ஈர்ப்பியல் விதி :** அண்டத்தில் உள்ள பொருட்களின் ஒவ்வோர் துகளும் பிற துகளை ஒரு குறிப்பிட்ட விசை மதிப்பில் ஈர்க்கிறது. அவ்விசையானது அவைகளின் நிறைகளின் பெருக்கற்பலனுக்கு நேர்விகிதத்திலும், அவைகளின் மையங்களுக்கிடையே உள்ள தொலைவின் இருமடிக்கு எதிர்விகிதத்திலும் இருக்கும்.

## 2. ஒளியியல்

❋ **ஒளிவிலகலின் முதல் விதி :** படுகதிர், விலகுகதிர், படுபுள்ளியில் விலகல் அடையும் பரப்புக்குச் செங்குத்தாக வரையப்படும் கோடு ஆகியவை ஒரே தளத்தில் அமைகின்றன.

❋ **ஒளிவிலகலின் இரண்டாம் விதி (அ) ஸ்நெல் விதி :** படுகோணத்தின் சைன் மதிப்பிற்கும், விலகு கோணத்தின் சைன் மதிப்பிற்கும் இடையே உள்ள தகவானது அவ்விரு ஊடகங்களின் ஒளிவிலகல் எண்களின் தகவிற்கு சமம்.

### மீட்சியற்ற சிதறலின் வகைகள்

***i)*** **ராலே ஒளிச்சிதறல் :** *சூரியனிலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் வளிமண்டலத்தில் உள்ள வாயு அணுக்கள் மற்றும் மூலக்கூறுகளால் சிதறலடிக்கப்படுகிறது.* ***எ.கா:*** *சூரிய உதயம் & மறைவின் போது சூரியன் சிவப்பு நிறமாதல்.*

***ii)*** **மீ–ஒளிச்சிதறல் :** துகளின் விட்டமானது, படும் ஒளிக்கதிரின் அலைநீளத்திற்குச் சமமாகவோ/அலைநீளத்தைவிட அதிகமாகவோ இருக்கும் போது ஏற்படும் ஒளிச்சிதறல். ***எ.கா:*** *மேகங்களின் வெள்ளைத் தோற்றம்.*

***iii)*** **டிண்டால் ஒளிச்சிதறல்:** கூழ்மக் கரைசலில் உள்ள கூழ்மத்துகள்களால், ஒளிக்கதிர்கள் சிதறலடிக்கப்படுகின்ற நிகழ்வு.

***iv)*** **ராமன் ஒளிச்சிதறல் :** தூய திரவங்கள் (அ) ஒளிபுகும் தன்மை கொண்ட திண்மங்களில் உள்ள துகள்களுடன் இடைவினை புரிவதன் காரணமாக ஒளிக்கதிரின் அலைநீளம்/அதிர்வெண்ணில் மாற்றங்கள் ஏற்படும் நிகழ்வு.

### கண்ணின் குறைபாடுகள்

- **மையோபியா:** கிட்டப்பார்வை, தொலைவில் உள்ள பொருள்களை காணமுடியாது.
- **ஹைப்பர் மெட்ரோஃபியா:** தூரப்பார்வை, அருகில் உள்ள பொருள்களை காணமுடியாது.
- **விழி ஏற்பமைவுத் திறன் குறைபாடு** (presbyopia) **:** வயதுமுதிர்வு காரணமாக, சிலியரித் தசைகள் வலுவிழந்து விழிலென்சு தன் நெகிழ்வுத் தன்மையை இழப்பதால் ஏற்படும்.
- **பார்வைச் சிதறல் குறைபாடு** (Astigmatism) **:** இணையான மற்றும் கிடைமட்டக் கோடுகளைத் தெளிவாகக் காண இயலாது.




**குவிலென்சு மற்றும் குழிலென்சில் நடைபெறும் ஒளிவிலகலால் பிம்பங்கள் தோன்றுதல்**

| குவிலென்சு | | குழிலென்சு | |
|---|---|---|---|
| **விதி 1:** ஒளிக்கதிரானது, ஒரு குவிலென்சின் ஒளியியல் மையத்தின் வழியாகச் செல்லும் போது விலகலடையாமல் அதே பாதையில் செல்கிறது. |  | ஒளிக்கதிரானது, ஒரு குழிலென்சின் ஒளியியல் மையத்தின் வழியாகச் செல்லும் போது விலகலடையாமல் அதே பாதையில் செல்கிறது. |  |
| **விதி 2:** முதன்மை அச்சுக்கு இணையாக வரும் ஒளிக்கதிர்கள், குவிலென்சின் மீது படும்போது முதன்மைக் குவியத்தில் குவிக்கப்படும். |  | முதன்மை அச்சுக்கு இணையாக வரும் ஒளிக்கதிர்கள், குழிலென்சின் மீது படும்போது முதன்மைக் குவியத்திலிருந்து விலகலடைந்து செல்வது போல் தோன்றும். |  |
| **விதி 3:** முதன்மைக்குவியம் வழியாகச் சென்று குவிலென்சின் மீது விழும் ஒளிக்கதிர்கள், விலகலடைந்த பிறகு முதன்மை அச்சுக்கு இணையாகச் செல்லும். |  | முதன்மைக்குவியத்தை நோக்கிச் சென்று குழிலென்சின் மீது விழும் ஒளிக்கதிர்கள், விலகலடைந்த பிறகு முதன்மை அச்சுக்கு இணையாகச் செல்லும். |  |

waytosuccess

## குவிலென்சின் வழியாக ஒளிவிலகல்

| | |
|---|---|
| பொருளின் நிலை : ஈறிலாத் தொலைவு<br>பிம்பத்தின் நிலை : குவியத்தில் (F) | அளவு : பிம்பம் < பொருள்<br>மெய்ப்பிம்பம் |




| | |
|---|---|
| பொருளின் நிலை: F & 2F-க்கு இடையே<br>பிம்பத்தின் நிலை : 2F(C)–க்கு அப்பால் | அளவு : பிம்பம் > பொருள்<br>தலைகீழான மெய்பிம்பம் |




| | |
|---|---|
| பொருளின் நிலை : 2F(C)–க்கு அப்பால்<br>பிம்பத்தின் நிலை :F & 2F-க்கு இடையே | அளவு : பிம்பம் < பொருள்<br>தலைகீழான மெய்ப்பிம்பம் |




| | |
|---|---|
| பொருளின் நிலை : குவியத்தில் (F)<br>பிம்பத்தின் நிலை : ஈறிலாத் தொலைவு | அளவு : பிம்பம் > பொருள்<br>தலைகீழான மெய்ப்பிம்பம் |




| | |
|---|---|
| பொருளின் நிலை : 2F<br>பிம்பத்தின் நிலை : 2F | அளவு : பிம்பம் = பொருள்<br>தலைகீழான மெய்ப்பிம்பம் |




| | |
|---|---|
| பொருளின் நிலை : F & O-க்கு இடையே<br>பிம்பத்தின் நிலை: F & 2F-க்கு இடையே | அளவு : பிம்பம் > பொருள்<br>நேரான மாய பிம்பம் |




## குழிலென்சின் வழியாக ஒளிவிலகல்

| | |
|---|---|
| பொருளின் நிலை : ஈறிலாத் தொலைவு<br>பிம்பத்தின் நிலை : குவியத்தில் (F) | அளவு : பிம்பம் < பொருள்<br>மாயபிம்பம் |




| |
|---|
| பொருளின் நிலை : அளவிடக்கூடிய தொலைவில் வைக்கப்படும்போது<br>பிம்பத்தின் நிலை : F & O-க்கு இடையே |
| அளவு : பிம்பம் < பொருள், நேரான மாயபிம்பம் |




**லென்சிற்கும் பொருளுக்கும் இடையே தூரம் குறையும்போது, பிம்பத்திற்கும் லென்சிற்கும் இடையே உள்ள தொலைவும் குறைகிறது.**

**குறிப்பு: AB** என்பது பொருள் மற்றும் **A'B'** என்பது பிம்பம்

## 3. வெப்ப இயற்பியல்

| | வெப்பவிரிவின் வகைகள் | வரையறை |
|---|---|---|
| திடப் பொருள் | நீள் வெப்பவிரிவு | வெப்பப்படுத்துதலின் விளைவாக நீளம் அதிகரிப்பதால் ஏற்படும் விரிவு. |
| | பரப்பு வெப்பவிரிவு | வெப்பப்படுத்துதலின் விளைவாக பரப்பு அதிகரிப்பதால் ஏற்படும் விரிவு. |
| | பரும வெப்பவிரிவு | வெப்பப்படுத்துதலின் விளைவாக பருமன் அதிகரிப்பதால் ஏற்படும் விரிவு. |
| வாயு | உண்மை வெப்ப விரிவு | கொள்கலன் இல்லாமல் நேரடியாக திரவத்தினை வெப்பப்படுத்தும் போது ஏற்படும் வெப்ப விரிவு. |
| | தோற்ற வெப்ப விரிவு | கொள்கலனின் விரிவினை பொருட்படுத்தாமல் திரவத்தின் தோற்ற விரிவினை மட்டும் கணக்கில் கொள்வது. |

* **பாயில் விதி:** மாறா வெப்பநிலையில், ஒரு குறிப்பிட்ட நிறையுடைய வாயுவின் அழுத்தம் அவ்வாயுவின் பருமனுக்கு எதிர்த்தகவில் அமையும்.
* **சார்லஸ் விதி:** மாறா அழுத்தத்தில் வாயுவின் பருமன் அவ்வாயுவின் வெப்பநிலைக்கு நேர்த்தகவில் அமையும்.
* **அவகேட்ரோ விதி:** மாறா வெப்பநிலை மற்றும் அழுத்தத்தில், வாயுவின் பருமன் அவ்வாயுவில் உள்ள அணுக்கள் அல்லது மூலக்கூறுகளின் எண்ணிக்கைக்கு நேர்த்தகவில் அமையும்.
* **இயல்பு வாயு:** குறிப்பிட்ட கவர்ச்சி விசையினால், ஒன்றோடொன்று இடைவினை புரிந்து கொண்டிருக்கும் அணுக்கள் (அ) மூலக்கூறுகள் அடங்கிய வாயுக்கள்
* **நல்லியல்பு வாயு:** ஒன்றோடொன்று இடைவினை புரியாமல் இருக்கும் அணுக்கள் (அ) மூலக்கூறுகள் அடங்கிய வாயுக்கள்.

## 4. மின்னோட்டவியல்

* **ஓம் விதி :** மாறா வெப்பநிலையில், கடத்தி ஒன்றின் வழியே பாயும் சீரான மின்னோட்டம் 'I' கடத்தியின் முனைகளுக்கிடையே உள்ள மின்னழுத்த வேறுபாட்டிற்கு 'V' நேர்த்தகவில் அமையும். V = IR.
* **ஜூல் விதி :** ஒரு மின்தடையில் உருவாகும் வெப்பமானது, • மின்னோட்டத்தின் இருமடிக்கு நேர்விகிதத்திலும் • மின் தடைக்கும் நேர் விகிதத்திலும் • மின்னோட்டம் பாயும் காலத்திற்கு நேர்விகிதத்திலும் இருக்கும்.
* **குறுக்குதடச் சுற்று :** மின்னோட்ட கம்பி நடுநிலை கம்பியோடு தொடும்போது ஏற்படுவது குறுக்குத்தடச் சுற்று.
* **குதிரை திறன் :** மின்திறனை அளவிடுவதற்கு பயன்படுகிறது. குதிரை திறன் என்பது 746 வாட் ஆகும்.

## 5. ஒலியியல்

**ஒலி அலைகளின் திசைவேகம்: பாதிக்கும் காரணிகள்:** வெப்பநிலை, அடர்த்தி, ஒப்புமை ஈரப்பதம், மீட்சிப் பண்பு

- ✓ **துகள் திசைவேகம்:** ஒரு ஊடகத்தில் அலைகள் வடிவில் ஆற்றலைக் கடத்துவதற்காக துகள்கள் அதிர்வடையும் திசைவேகம்.
- ✓ **அலைத் திசைவேகம்:** ஒரு ஊடகத்தின் வழியே அலை பரவும் திசைவேகம் ஆகும்.

* **எதிரொலிப்பின் பயன்பாடுகள்:** கூம்பு ஒலிப்பெருக்கி, காது கேட்க உதவும் கருவி, மெதுவாகப் பேசும் கூடம்.
* **டாப்ளர் விளைவு:** ஒலி மூலத்திற்கும், கேட்குநருக்கும் இடையே சார்பியக்கம் இருக்கும் போது, கேட்குநரால் கேட்கப்படும் ஒலியின் அதிர்வெண்ணானது, ஒலி மூலத்தின் அதிர்வெண்ணிலிருந்து மாறுவது போல் தோன்றுவது.
* **ரேடார் (RADAR):** Radio Detection and Ranging – ரேடியோ அலைகளை அனுப்பி விமானங்களின் வேகம் மற்றும் இருப்பிடத்தைக் கண்டறிய பயன்படுகிறது.
* **சோனார் (SONAR):** Sound Navigation and Ranging - கடல் வாழ் உயிரினங்கள் & நீர்மூழ்கிக் கப்பல்களின் வேகத்தைக் கண்டறியலாம்.

## 6. அணுக்கரு இயற்பியல்

* **கதிரியக்க இடம்பெயர்வு விதி (அ) சாடி மற்றும் ஃபஜன் விதி** *:*

  *i)* கதிரியக்கத் தனிமம் ஒன்று ஒரு $\alpha$ – துகளை உமிழும் போது அதன் நிறை எண்ணில் நான்கும், அணு எண்ணில் இரண்டும் என்ற அளவில் குறைந்து புதிய சேய் உட்கரு உருவாகும்.

  *ii)* கதிரியக்கத் தனிமம் ஒன்று ஒரு $\beta$ – துகளை உமிழும்போது அதன் நிறை எண் மாறாமலும், அணு எண்ணில் ஒன்று அதிகரித்தும் புதிய சேய் உட்கரு உருவாகும்.

| | |
|---|---|
| **ஆல்பா சிதைவு** : $_{Z}Y^{A} \rightarrow {}_{Z-2}Y^{A-4} + {}_{2}He^{4}$ | **பீட்டா சிதைவு** : $_{Z}Y^{A} \rightarrow {}_{Z+1}Y^{A} + {}_{-1}e^{0}$ |

* **அணுக்கரு பிளவு:** **எ.கா :** $_{92}U^{235} + {}_{0}n^{1} \rightarrow {}_{56}Ba^{141} + {}_{36}Kr^{92} + 3\ {}_{0}n^{1} + Q$ (ஆற்றல்) **அணு குண்டு**
* **அணுக்கரு இணைவு வினை:** **எ.கா :** $_{1}H^{2} + {}_{1}H^{2} \rightarrow {}_{2}He^{4} + Q$ (energy) **ஹைட்ரஜன் குண்டு**
* **அணுக்கரு உலை:** தற்சார்புடைய கட்டுப்படுத்தப்பட்ட அணுக்கரு பிளவு வினை நடைபெற்று மின் உற்பத்திச் செய்யும் இடம்.
* **மாறுநிலை நிறை($m_c$):** தொடர்வினையைத் தொடர்ந்து நிலை நிறுத்துவதற்குத் தேவையான பிளவுப் பொருள்களின் குறைந்த அளவு நிறை ஆகும்.

Way to Success

## 7. அணுக்களும் மூலக்கூறுகளும்

* **ஐசோடோப்பு:** ஒரே தனிமத்தின் அணுக்கள் வெவ்வேறு அணு நிறைகளைப் பெற்றுள்ளன. **எ.கா** : $_{17}Cl^{35}$, $_{17}Cl^{37}$
* **ஐசோபார்:** வெவ்வேறு தனிமங்களின் அணுக்கள் ஒரே அணுநிறைகளைப் பெற்றுள்ளன. **எ.கா:** $_{18}Ar^{40}$, $_{20}Ca^{40}$
* **ஐசோடோன்:** வெவ்வேறு தனிமங்களின் அணுக்கள் ஒரே நியூட்ரான் எண்ணிக்கையைப் பெற்றுள்ளன. **எ.கா:** $_{6}C^{13}$, $_{7}N^{14}$
* **அணுக்கட்டு எண்:** அணுக்கட்டு எண் என்பது அம்மூலக்கூறில் உள்ள அணுக்களின் எண்ணிக்கை.

| **அணுநிறை அலகு** | **சராசரி அணுநிறை** |
|---|---|
| அணுவின் நிறை C–12 அணுவின் நிறையில் 12இல் ஒரு பகுதி ஆகும். | இது இயற்கையில் கிடைக்கக்கூடிய கணக்கிடப்பட்ட ஐசோடோப்புகளின் சராசரி நிறையைக் குறிப்பதாகும். |
| **கிராம் அணுநிறை** | **கிராம் மூலக்கூறு நிறை** |
| ஒரு தனிமத்தின் அணுநிறையை கிராமில் குறிப்பிடுதல். | ஒரு சேர்மத்தின் மூலக்கூறு நிறையை கிராமில் குறிப்பிடுதல். |
| **ஒப்பு அணுநிறை (அ) திட்ட அணு எடை** | **ஒப்பு மூலக்கூறு நிறை** |
| இது தனிமத்தின் ஐசோடோப்புகளின் சராசரி அணு நிறைக்கும் C–12 அணுவின் நிறையில் $^1/_{12}$ பங்கின் நிறைக்கும் உள்ள விகிதமாகும். | இது ஒரு மூலக்கூறின் நிறைக்கும், C-12 அணுவின் நிறையில் $^1/_{12}$ பங்கின் நிறைக்கும் உள்ள விகிதமாகும். |

$_{6}C^{12}$ — 12 ———— நிறை எண் (A); 6 ———— அணு எண் (Z)

*நிறை எண் = புரோட்டான்கள் + நியூட்ரான்கள்*
*அணு எண் = புரோட்டான்கள் (அ) எலக்ட்ரான்கள்*

**முக்கிய தனிமங்களின் அணுநிறைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஹைட்ரஜன் (H) | **1** | நைட்ரஜன் (N) | **14** | பாஸ்பரஸ் (P) | **30** | குளோரின் (*Cl*) | **35.5** |
| கார்பன் (C) | **12** | ஆக்சிஜன் (O) | **16** | சல்பர் (S) | **32** | கால்சியம் (Ca) | **40** |

## 8. தனிமங்களின் ஆவர்த்தன வகைப்பாடு

**நவீன ஆவர்த்தன விதி** தனிமங்களின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள் அவற்றின் அணு எண்களின் சார்பாக அமையும்.

| ஆவர்த்தன பண்புகள் | தொடரில்<br>இடதுபுறத்திலிருந்து வலதுபுறம் | தொகுதியில்<br>மேலிருந்து கீழ் |
|---|---|---|
| **அணு ஆரம்** : அணுக்கருவின் மையத்திற்கும், இணைதிற எலக்ட்ரான் உள்ள வெளிக்கூட்டிற்கும் இடையேயான தூரம்.<br>**அயனி ஆரம்** : அயனியின் கருமையத்திற்கும் அவ்வயனியின் எலக்ட்ரான் திரள் முகில் மீது அதன் கருவால் கவர்ச்சி விசை செலுத்த இயலும் தூரத்திற்கும் இடையேயான தொலைவு. | **குறைதல்**<br>வெளிக்கூடு எண் மாறுவதில்லை, புரோட்டான்களின் எண்ணிக்கை அதிக்கிறது, ஈர்ப்பு அதிகரிக்கிறது. இதனால் அணு ஆரம் குறைகிறது. | **அதிகரித்தல்**<br>வெளிக்கூடு எண் அதிக்கப்பதால் |
| **அயனியாக்கும் ஆற்றல்** : ஒரு வாயு நிலை அணுவின்அடி ஆற்றல் நிலையில் உள்ள ஒரு எலக்ட்ரானை நீக்குவதற்கு தேவைப்படும் குறைந்தபட்ச ஆற்றல். | **அதிகரித்தல்**<br>அணு ஆரம் குறைகிறது. | **குறைதல்**<br>எலக்ட்ரான் இலகுவாக பிணைக்கப்பட்டுள்ளது. |
| **எலக்ட்ரான் நாட்டம்** : ஒரு வாயு நிலை அணுவில்ஒரு எலக்ட்ரானை சேர்த்து எதிர்மின் சுமையுடைய அயனியை உருவாக்கும்போது வெளிப்படும் ஆற்றல். | **அதிகரித்தல்**<br>அணு ஆரம் குறைகிறது. | **குறைதல்**<br>எலக்ட்ரான் இலகுவாக பிணைக்கப்பட்டுள்ளது. |
| **எலக்ட்ரான் கவர்தன்மை** : சகப்பிணைப்பில் உள்ள மூலக்கூறில் ஒரு அணு எலக்ட்ரான் இணையினை தன்னை நோக்கி கவரும் பண்பு. | **அதிகரித்தல்**<br>அணுக்கரு மின்சுமை அதிகரிப்பு | **குறைதல்**<br>ஆற்றல் மட்டத்தின் எண்ணிக்கை அதிகரிக்கும். |

**உலோகவியல்**

| அலுமினியம் | தாமிரம் | இரும்பு |
|---|---|---|
| **அலுமினியத்தின் தாதுக்கள் :**<br>பாக்சைட் $Al_2O_3.2H_2O$<br>கிரையோலைட் $Na_3AlF_6$<br>கொரண்டம் $Al_2O_3$ | **தாமிரத்தின் தாதுக்கள் :**<br>காப்பர் பைரைட் $CuFeS_2$<br>குப்ரைட்(அ) ரூபி காப்பர் $Cu_2O$<br>காப்பர் கிளான்ஸ் $Cu_2S$ | **இரும்பின் தாதுக்கள் :**<br>ஹேமடைட் $Fe_2O_3$<br>மேக்னடைட் $Fe_3O_4$<br>இரும்பு பைரைட் $FeS_2$ |
| • வெள்ளியைப் போல வெண்மையான உலோகம் | • இது செம்பழுப்பு நிற உலோகம் | • பளபளப்பான, சாம்பல் நிற உலோகம் |

waytosuccess

## 9. கரைசல்கள்

**கரைபொருள்** + **கரைப்பான்** ⟶ **கரைசல்**

(குறைந்த அளவு எடைகொண்ட கூறு) (அதிகஅளவு எடைகொண்ட கூறு) (இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட பொருள்களைக் கொண்ட ஒருபடித்தான கலவை)

**கரைசலின் வகைகள் கீழ்க்கண்டவற்றின் அடிப்படையில்...**

1. **கரைசலின் கூறுகளின் அடிப்படையில் :** • ***இருமடிக்கரைசல் :*** 2 கூறுகள். • ***மும்மடிக்கரைசல் :*** 3 கூறுகள்.
2. **கரைபொருள் மற்றும் கரைப்பானின் இயற்பியல் நிலையின் அடிப்படையில் :**
   - ***i) திண்மக் கரைசல் :*** (a) திண்மம் – திண்மம் ***எ.கா :*** உலோகக் கலவை
     (b) திரவம் – திண்மம் ***எ.கா :*** இரசக் கலவைகள்.
   - ***ii) திரவக் கரைசல் :*** (a) திண்மம் – திரவம் ***எ.கா :*** நீரில் கரைக்கப்பட்ட NaCl கரைசல்
     (b) திரவம் – திரவம் ***எ.கா :*** நீரில் கரைக்கப்பட்ட எத்தில் ஆல்கஹால்
     (c) வாயு – திரவம் ***எ.கா :*** சோடா நீர்
   - ***iii) வாயுக் கரைசல் :*** (a) திரவம் – வாயு ***எ.கா :*** மேகம் (b) வாயு – வாயு ***எ.கா :*** He-$O_2$ வாயுக்கலவை
3. **கரைப்பானின் தன்மையின் அடிப்படையில் :** • ***நீர்க்கரைசல்*** (நீர்) • ***நீரற்ற கரைசல்*** (நீரைத்தவிர பிற திரவங்கள்)
4. **கரைபொருளின் அளவின் அடிப்படையில் :**
   - ***தெவிட்டிய கரைசல் :*** மேலும் கரைபொருளை கரைக்க இயலாத கரைசல்.
   - ***தெவிட்டாத கரைசல் :*** தெவிட்டிய கரைசலைவிடக் குறைவான கரைபொருளைக் கொண்ட கரைசல்.
   - ***அதிதெவிட்டிய கரைசல் :*** தெவிட்டிய கரைசலைவிட அதிகமான கரைபொருளைக் கொண்ட கரைசல்.

| நீரேறிய உப்புகள் | |
|---|---|
| மயில் துத்தம் | $CuSO_4.\ 5\ H_2O$ |
| பச்சை விட்ரியால் | $FeSO_4.\ 7\ H_2O$ |
| வெள்ளை விட்ரியால் | $ZnSO_4.\ 7\ H_2O$ |
| எப்சம் உப்பு | $MgSO_4.7\ H_2O$ |
| ஜிப்சம் | $CaSO_4.\ 2\ H_2O$ |

## 10. வேதிவினைகளின் வகைகள்

**அணுக்களின் மறுசீரமைப்பு தன்மையைப் பொறுத்து வகைப்படுத்துதல்**

❖ **சேர்க்கை / கூடுகை / தொகுப்பு / இயைபு வினை:**

✓ தனிமம் + தனிமம் ⟶ சேர்மம் ***எ.கா :*** $H_{2\,(g)} + Cl_{2\,(g)} \rightarrow 2HCl_{(g)}$

✓ சேர்மம் + தனிமம் ⟶ சேர்மம் ***எ.கா :*** $PCl_{3\,(l)} + Cl_{2\,(g)} \rightarrow PCl_{5\,(s)}$

✓ சேர்மம் + சேர்மம் ⟶ சேர்மம் ***எ.கா :*** $SiO_{2\,(s)} + CaO_{(s)} \rightarrow CaSiO_{3\,(s)}$



❖ **சிதைவு வினைகள்:**



✓ வெப்பச்சிதைவு வினை : $2HgO_{(s)} \xrightarrow{heat} 2Hg_{(l)} + O_{2(g)}$

✓ மின்னாற்சிதைவு வினை : $2NaCl_{(aq)} \xrightarrow{electricity} 2Na_{(s)} + Cl_{2(g)}$

✓ ஒளிச்சிதைவு வினை : $2AgBr_{(s)} \xrightarrow{light} 2Ag_{(s)} + Br_{2(g)}$

❖ **ஒற்றை இடப்பெயர்ச்சி வினை:**

***எ.கா :*** $Zn_{(s)} + 2HCl_{(aq)} \longrightarrow ZnCl_{2(aq)} + H_{2(g)}$




❖ **இரட்டை இடப்பெயர்ச்சி / மெட்டாதிஸிஸ் வினை:**



✓ **வீழ்படிவாக்கல் வினை:** $Pb(NO_3)_{2(aq)} + 2KI_{(aq)} \longrightarrow PbI_{2(s)} \downarrow + 2KNO_{3(aq)}$

✓ **நடுநிலையாக்கல் வினை:** $NaOH_{(aq)} + HCl_{(aq)} \longrightarrow NaCl_{(aq)} + H_2O_{(l)}$

❖ **எரிதல் வினை:** ***எ.கா :*** $C_3H_{8(g)} + 5O_{2(g)} \longrightarrow 3CO_{2(g)} + 4H_2O_{(g)}$ + வெப்பம்

**வினை நடைபெறும் திசையைக் கொண்டு வகைப்படுத்துதல்**

❖ **மீள் வினை: வகைகள்:** • முன்னோக்கு வினை
• பின்னோக்கு வினை

$PCl_{5\,(g)} \rightleftharpoons PCl_{3(g)} + Cl_{2(g)}$

❖ **மீளா வினை:** முன்னோக்கு வினையாக மட்டுமே நடைபெறும்.

$C_{(s)} + O_{2(g)} \longrightarrow CO_{2(g)} + Heat$

| pH | |
|---|---|
| $pH = -\log_{10}[H^+]$ | $pH < 7 \Rightarrow$ அமிலம்<br>$pH > 7 \Rightarrow$ காரம்<br>$pH = 7 \Rightarrow$ நடுநிலை |
| நீரின் அயனிப்பெருக்கம் $K_W = [H^+]\,[OH^-]$ | |

Way to success

# 11. கார்பனும் அதன் சேர்மங்களும்

## ஹைட்ரோகார்பன்கள்

(கார்பன் மற்றும் ஹைட்ரஜன் மட்டுமே இணைந்து உருவாகும் சேர்மங்கள்)

**அல்கேன்கள்**

- ஒற்றைப் பிணைப்பு
- நிறைவுற்ற சேர்மம்
- பொது வாய்ப்பாடு $C_nH_{2n+2}$
- எ.கா : மீத்தேன் $CH_4$

**அல்கீன்கள்**

- இரட்டைப் பிணைப்பு
- நிறைவுறா சேர்மம்
- பொது வாய்ப்பாடு $C_nH_{2n}$
- எ.கா : ஈத்தீன் $CH_2 = CH_2$

**அல்கைன்கள்**

- மும்மைப் பிணைப்பு
- நிறைவுறா சேர்மம்
- பொது வாய்ப்பாடு $C_nH_{2n-2}$
- எ.கா : ஈத்தைன் $CH \equiv CH$

## வினைச்செயல் தொகுதியின் அடிப்படையில் கரிமச்சேர்மங்களின் வகைப்பாடு

| கரிமச்சேர்மத்தின் வகைப்பாடு | ஆல்கஹால் | ஆல்டிஹைடு | கீட்டோன் | கார்பாக்சிலிக் அமிலம் | எஸ்டர் (பழச்சாற்றின் மணம்) | ஈதர் |
|---|---|---|---|---|---|---|
| வினைச்செயல் தொகுதி | $-OH$ | $-\overset{O}{\overset{\Vert}{C}}-H$ | $-\overset{O}{\overset{\Vert}{C}}-$ | $-\overset{O}{\overset{\Vert}{C}}-OH$ | $-\overset{O}{\overset{\Vert}{C}}-OR$ | $-O-R$ |
| பொ. வாய்ப்பாடு | $R-OH$ | $R-CHO$ | $R-CO-R$ | $R-COOH$ | $R-COOR$ | $R-O-R$ |
| உதாரணம் | எத்தனால் $CH_3CH_2OH$ | அசிட்டால்டிஹைடு $CH_3CHO$ | அசிட்டோன் $CH_3COCH_3$ | அசிட்டிக் அமிலம் $CH_3COOH$ | மெத்தில் அசிட்டேட் $CH_3COOCH_3$ | டை மெத்தில் ஈத்தர் $CH_3OCH_3$ |
| பயன்கள் | கரைப்பான், புரைத்தடுப்பான் | கிருமிநாசினி | கரைப்பான், கறை நீக்கி | சாயங்கள், நிறங்கள் & வண்ணப் பூச்சுகள் | எண்ணெய்கள் மற்றும் லிப்பிடுகளில் உள்ளது | மயக்கமூட்டி, வலி நிவாரணி |

## IUPAC பெயர்கள் – முன்னொட்டு + அடிப்படைச்சொல் + பின்னொட்டு

**முன்னொட்டு (விதி–2)**

| பதிலி/கிளை | பெயர் |
|---|---|
| $-F$ | புளோரோ |
| $-Cl$ | குளோரோ |
| $-Br$ | புரோமோ |
| $-I$ | ஐயோடோ |
| $-NH_2$ | அமினோ |
| $-CH_3$ | மெத்தில் |
| $-CH_2CH_3$ | எத்தில் |

**அடிப்படைச்சொல்(விதி–1)**

| கார்பன்களின் எண்ணிக்கை | பெயர் |
|---|---|
| 1 | மீத் - |
| 2 | ஈத் - |
| 3 | புரப் - |
| 4 | பியூட் - |
| 5 | பென்ட் - |
| 6 | ஹெக்ஸ் - |
| 8 | ஆக்ட் - |
| 9 | நான் - |
| 10 | டெக் -- |

**பின்னொட்டு [MAY-2022]**

| முதன்மை (விதி–3) | | இரண்டாம் நிலை (விதி–4) | |
|---|---|---|---|
| பிணைப்பின் தன்மை | பெயர் | வினை செயல் தொகுதி | பெயர் |
| ஒற்றை | -யேன் | ஆல்கஹால்(-OH) | ஆல் |
| இரட்டை | - ஈன் | ஆல்டிஹைடு (CHO) | ஏல் |
| முப்பிணைப்பு | - ஐன | கீட்டோன் (-CO-) | ஓன் |
| | | கார்பாக்சிலிக் அமிலம் (-COOH) | ஆயிக் அமிலம் |

**விதி 5** - முதன்மை பின்னொட்டு மற்றும் இரண்டாம் நிலை பின்னொட்டு சேர்க்கப்பட்டு பிறகு முதன்மை பின்னொட்டில் இருக்கும் **'e'** நீக்கப்பட வேண்டும்.

**விதி 6** – பதிலியின் இடம் கண்டறியப்பட்டு இட எண்ணை தொடர்ந்து கோடு மற்றும் பதிலியை குறிக்கும் முன்னொட்டு குறிப்பிட வேண்டும்.

## ஆல்கஹாலின் (மது) வகைகள்

**i) ஆற்றல் ஆல்கஹால் :** பெட்ரோல் & எத்தனால்.

**ii) எரிசாராயம் :** 95.5% எத்தனால் & 4.5 % நீர்.

**iii) இயல்பு தன்மை இழந்த ஆல்கஹால் :** எத்தனால் & பிரிடின்.

**iv) மெத்தில் ஆல்கஹால் கலந்த சாராயம் :** 95% எத்தனால் & 5 % மெத்தனால்.

**v) தனி ஆல்கஹால் :** தூய ஆல்கஹால் (100%).

## 12. தாவர உள்ளமைப்பியல் மற்றும் தாவர செயலியல்

✱ **வாஸ்குலார் கற்றைகள்:** சைலம் (நீர் &கனிமங்களை கடத்துகிறது) &புளோயம் (உணவுப் பொருள்களை கடத்துகிறது).

✱ ***உள்நோக்கிய சைலம் (எண்டார்க்):*** மையம் நோக்கிய புரோட்டோசைலம், வெளிப்புறம் நோக்கிய மெட்டாசைலம். ***எ.கா:*** தண்டு.

✱ ***வெளிநோக்கிய சைலம் (எக்ஸார்க்):*** வெளிப்புறம் நோக்கிய புரோட்டோசைலம், மையம் நோக்கிய மெட்டா சைலம். ***எ.கா:*** வேர்.

★ **இருவிதையிலை வேர்** – ஆரப்போக்கு, சைலம் வெளிநோக்கிய & நான்குமுனை. **எ.கா :** அவரை

★ **ஒருவிதையிலை வேர்** – ஆரப்போக்கு, சைலம் வெளிநோக்கிய & பலமுனை. **எ.கா :** சோளம்

★ **இருவிதையிலை தண்டு** – ஒன்றிணைந்த, ஒருங்கமைந்த, திறந்த & உள்நோக்கு சைலம். **எ.கா :** சூரியகாந்தி

★ **ஒருவிதையிலை தண்டு** – ஒன்றிணைந்த, ஒருங்கமைந்த, மூடிய & உள்நோக்கு சைலம். **எ.கா :** மக்காச்சோளம்

★ **ஒருவிதையிலை(புல்) இலை & இருவிதையிலை(மா) இலை –** ஒன்றிணைந்த, ஒருங்கமைந்த மற்றும் மூடியவை.

✱ **கணிகங்களின் வகைகள்:** 1) பசுங்கணிகம் (குளோரோபிளாஸ்ட்) - பச்சை நிறமுடைய கணிகம்
2) வண்ணக்கணிகம் (குரோமோபிளாஸ்ட்) - மஞ்சள், சிவப்பு, ஆரஞ்சு நிறமுடைய கணிகம்
3) வெளிர்க்கணிகம் (லியூக்கோபிளாஸ்ட்) - நிறமற்ற கணிகம்

✱ **ஒளிச்சேர்க்கை:** $$6CO_2 + 6H_2O \xrightarrow[\text{பச்சையம்}]{\text{சூரியஒளி}} \underset{\text{குளுக்கோஸ்}}{C_6H_{12}O_6} + \underset{\text{ஆக்சிஜன்}}{6O_2 \uparrow}$$

➢ ஒளிசார்ந்த வினை (ஹில்வினை / ஒளி வினை) ➢ ஒளிசாரா வினை (கால்வின் சுழற்சி / இருள்வினை)

✱ **மைட்டோகாண்ட்ரியா:** செல்லின் ஆற்றல் நிலையம்

✱ **சுவாசித்தல்:** 1) **காற்று சுவாசம்:** $C_6H_{12}O_6 + 6O_2 \longrightarrow 6CO_2 + 6H_2O + ATP$

***i) கிளைக்காலிஸிஸ் (குளுக்கோஸ் பிளப்பு):*** சைட்டோபிளாசத்தில் நடைபெறும். குளுக்கோஸ் → பைருவிக் அமிலம்

***ii) கிரப்சுழற்சி / ட்ரை கார்பாக்ஸிலிக் அமில சுழற்சி (TCA):*** மைட்டோகாண்ட்ரியாவின் உட்கூழ்மத்தில் நடைபெறுகிறது. பைருவிக் அமிலம் → $CO_2$ & $H_2O$

***iii) எலக்ட்ரான் கடத்தும் சங்கிலி அமைப்பு :*** எலக்ட்ரான் கடத்தும் அமைப்பு மூலம் $NADH_2$ & $FADH_2$ → $NAD^+$ & $FAD^+$

2) **காற்றில்லா சுவாசம்:** $C_6H_{12}O_6 \longrightarrow 2\,CO_2 + 2C_2H_5OH +$ ஆற்றல் (ATP)

✱ சுவாச ஈவு = $\dfrac{\text{வெளியிடப்படும் } CO_2 \text{ அளவு}}{\text{எடுத்துக்கொள்ளப்படும் } O_2 \text{ அளவு}}$

## 13. உயிரினங்களின் அமைப்பு நிலைகள்

### இந்தியக் கால்நடை அட்டை (முதுகுநாணற்றவை)

✱ **இடப்பெயர்ச்சி :** (i) வளைதல் (அ) ஊர்தல் முறை (ii) நீந்துதல் முறை.

✱ **உணவுக் குழல்:** வாய்→வாய்க்குழி → தொண்டை → தீனிப்பை→ வயிறு→ சிறுகுடல்→மலக்குடல்→ மலத்துளை.

✱ **ஹிருடின் :** புரதத்தைச் சுரப்பதன் மூலம் இரத்த உறைவைத் தடுக்கின்றன.

✱ **நான்கு கால்வாய்கள்:** உணவுப்பாதையின் மேல்புறம், கீழ்புறம், மற்றும் மற்ற இரு பக்கங்களிலும் அமைந்த இதயம் போன்றுது.

✱ **அட்டையின் மருத்துவப் பயன்கள் :** • இரத்த ஓட்ட மண்டலம் தொடர்பான நோய்களைக் குணப்படுத்துகிறது.
• உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மருந்துகள் தயாரிக்கப் பயன்படுகின்றன.

### முயல் (முதுகுநாணுள்ளவை)

✱ **உணவுப் பாதை :** வாய் → வாய்க்குழி→ தொண்டை→ உணவுக்குழாய் → இரைப்பை→ சிறுகுடல் → குடல்வால் நீட்சி → பெருங்குடல் → மலத்துளை.

✱ **முயலின் பல் வாய்ப்பாடு:** $\left(I\frac{2}{1}, C\,\frac{0}{0}\,, PM\,\frac{3}{2}, M\,\frac{3}{3}\right)\frac{2033}{1023}$ முயலுக்கு கோரைப்பற்கள் கிடையாது.

✱ **டயாஸ்டீமா:** வெட்டும் பற்களுக்கும், முன் கடைவாய்ப் பற்களுக்கும் உள்ள இடைவெளி ஆகும்.

✱ **இனப்பெருக்க மண்டலம் :** ஆண், பெண் உயிரிகள் தனித்தனியே காணப்படுகின்றன.

• **ஆண் :** ஓரிணை விந்தகங்கள், விந்து நுண்குழல்கள், எபிடிடைமிஸ் மற்றும் விந்து நாளங்கள்.
**துணைச் சுரப்பிகள் :** புராஸ்டேட் சுரப்பி, கௌப்பர் சுரப்பி மற்றும் கழிவிடச் சுரப்பிகள்.

• **பெண் :** அண்டகம் → அண்டசெல்(முட்டை)→ ∴பெலோப்பியன் குழல்→ கருப்பை→ பிறப்புறப்பு → வெஸ்டிபியூல்→ வல்வா. **துணைச் சுரப்பிகள் :** கௌப்பரின் சுரப்பிகள் மற்றும் கழிவிடச் சுரப்பிகள்.

Way to success

## 14. தாவரங்களின் கடத்துதல் மற்றும் விலங்குகளின் சுற்றோட்டம்

* **பரவல்:** செறிவு மிகுந்த பகுதியிலிருந்து செறிவு குறைந்த பகுதிக்கு எவ்வித ஆற்றலின் உதவியின்றியும் கடத்தப்படுதல்.
* **சவ்வூடு பரவல்:** அரை கடத்து சவ்வின் வழியாக செறிவு மிகுந்த பகுதியிலிருந்து செறிவு குறைந்த பகுதிக்கு கடத்தப்படுதல்.
  - ✓ **பிளாஸ்மா சிதைவு:** செல்லை ஹைபர்டானிக் கரைசலில் வைக்கும்போது நீர் வெளியேறுவதால் புரோட்டோபிளாசம் சுருங்குகிறது.
  - ✓ **உள்ளீர்த்தல் :** தாவரப் பொருட்கள் நீரில் வைக்கப்படும்போது நீரினை உறிஞ்சி உப்புகின்ற நிகழ்ச்சி.
* **அப்போபிளாஸ்ட் வழி :** நீரானது செல்சுவர் மற்றும் செல் இடைவெளியின் வழியாகச் செல்கிறது.
* **சிம்பிளாஸ்ட் வழி:** நீரானது செல்லின் பிளாஸ்மா சவ்வு, சைட்டோபிளாசம் & பிளாஸ்மோடெஸ்மேட்டா வழியாக செல்கிறது.
* **நீராவிப்போக்கு:** இலையின் புறத்தோல் துளை வழியாக நீரானது ஆவியாக வெளியேறும் நிகழ்வு ஆகும்.
* **சாறேற்றம்:** வேர்களின் மூலம் உறிஞ்சப்பட்ட நீர் மற்றும் கனிமங்கள் மேல் நோக்கி பிற பகுதிகளுக்கு கடத்துதல்.
* **இரத்தத்தின் ஆக்கக்கூறுகள் (இரத்த அணுக்கள்) :**

அ) இரத்த சிவப்பணுக்கள்/எரித்ரோசைட்டுகள்: ஹீமோகுளோபின் உள்ளதால் சிவப்பு நிறத்தில் காணப்படுகிறது.

*ஆ) இரத்த வெள்ளை அணுக்கள் / லியூக்கோசைட்டுகள் :*

1) **துகள்களுடைய செல்கள்:** *(i)* **நியூட்ரோஃபில்கள்** *(ii)* **ஈசினோஃபில்கள்** *(iii)* **பேசோஃபில்கள்**

2) **துகள்களற்ற செல்கள்:** *(i)* **லிம்ஃபோசைட்டுகள்** *(ii)* **மோனோசைட்டுகள்**

*இ) இரத்த தட்டுகள் / திராம்போசைட்டுகள் :* இரத்தம் உறைதல்

* **ஹைபர்டென்ஷன்:** உயர் இரத்தஅழுத்தம் **ஹைப்போடென்ஷன்:** குறை இரத்தஅழுத்தம்
  **சிஸ்டோலிக் அழுத்தம்:** வென்ட்ரிக்கிள் சுருங்குவதால் அழுத்தம் உச்சத்திற்கு உயர்கிறது
  **டயஸ்டோலிக் அழுத்தம்:** வென்ட்ரிக்கிள் தளர்வதால் அழுத்தம் மிகக் குறைவாக இருக்கும்.
* **ஸ்டெத்தாஸ்கோப்:** உள்ளுறுப்புகள் ஏற்படுத்தும் ஒலியை கண்டறிய
* **ஸ்பிக்மோமானோமீட்டர்:** மனிதனின் இரத்த அழுத்தம் அளவிட.
* **முக்கிய மதிப்புகள்:** ➢ ஒவ்வொரு இதய சுழற்சியும் சுமார் 0.8 வினாடிகள் நீடிக்கும்.
  ➢ சாதாரண துடிப்பு விகிதம் 70-90/நிமி. ➢ சாதாரண இரத்த அழுத்தம்: 120/80 mm Hg.
  ➢ சாதாரண இதய துடிப்பு நிமிடத்திற்கு 72-75 முறை.

| இரத்த வகை | எந்த இரத்த வகைக்கு வழங்கலாம் | எந்த இரத்த வகையை பெறலாம் |
|---|---|---|
| A | A & AB | A & O |
| B | B & AB | B & O |
| AB | AB | A, B, AB, O |
| | (அனைவரிடமிருந்தும் பெறுவோர்) | |
| O | A, B, AB, O | O |
| | (அனைவருக்கும் வழங்கலாம்) | |

## 15. நரம்பு மண்டலம்

* **அமைப்பின் அடிப்படையில் நியூரான்களின் வகைகள்:** ஒருமுனை, இருமுனை மற்றும் பலமுனை.
* **செயல்பாட்டின் அடிப்படையில் நியூரான்களின் வகைகள்:** உணர்ச்சி/உட்செல், இயக்க/வெளிச்செல் & சங்கம நரம்புச் செல்.
* **நரம்புத் தூண்டல் கடத்தப்படுதல்:** தூண்டல்கள்→உணர்வேற்பி உறுப்புகள்→மின் தூண்டல்கள்→டெண்ட்ரான் → ஆக்சான் →நியூரோட்ரான்ஸ்மிட்டர்→ நரம்பு இணைவு→ அடுத்த நியூரானிலுள்ள டெண்ட்ரான்கள்.
  *நரம்பு தூண்டல்கள் தொடர்ந்து கடத்தப்பட்டு மூளை/தண்டுவடத்தை சென்றடைகின்றன.*

### மனித நரம்பு மண்டலம்

1) **மைய நரம்பு மண்டலம் (மூளை + தண்டுவடம்):**
   * **மூளை :** உடலின் அனைத்து செயல்பாடுகளையும் கட்டுப்படுத்தும் மையம்.
     - மூளை உறைகள் - டியூரா மேட்டர், அரக்னாய்டு உறை, பையா மேட்டர்
     - முக்கிய பகுதிகள் : **அ) முன் மூளை** (பெருமூளை & டயன்செ.ஃப்லான்)
       **ஆ) நடுமூளை** (கார்போரா குவாட்ரிஜெமினா) **இ) பின் மூளை** (சிறுமூளை, பான்ஸ், முகுளம்)
   * **தண்டு வடம்:** உணர்வுத் தூண்டல்கள், இயக்கத் தூண்டல்கள் முன்னும் பின்னுமாக கடத்தக்கூடியது. இது உடலின் அனிச்சைச் செயல்களைக் கட்டுப்படுத்துகிறது.

2) **புற அமைவு நரம்பு மண்டலம்:**
   * **கபால நரம்புகள்:** மூளையிலிருந்து உருவாகும் 12 இணை கபால நரம்புகள். உணர்ச்சி & இயக்க நரம்புகள்
   * **தண்டுவட நரம்புகள்:** தண்டுவடத்திலிருந்து உருவாகும் 31 இணைத் தண்டுவட நரம்புகள்.

**கீழ்ப்புற உணர்ச்சி வேர் & மேற்புற இயக்க வேர்**

3) **தானியங்கு நரம்பு மண்டலம்:** **பரிவு & எதிர்ப்பரிவு** நரம்புகள் இணைந்து உள்ளுறுப்புகளின் இயக்கங்களை ஒழுங்குபடுத்துதல்.

**அனிச்சை செயல் –** தன்னிச்சையாக ஒரு தூண்டலுக்கு பதில் விளைவாக நடக்கும் எதிர்வினை

* **உள்ளார்ந்த மற்றும் கற்றுணராத துலங்கல்கள். எ.கா :** கண்ணில் தூசி விழும்போது இமைகளை மூடுதல்.
* **கற்றல் மற்றும் பயிற்சியின் மூலம் செயல்படுத்தப்படுபவை. எ.கா :** ஹார்மோனியம் வாசித்தலில் இசை குறிப்புகளுக்கேற்ப கட்டைகளை செயல்படுத்துதல்

Way to Success

# 16. தாவர மற்றும் விலங்கு ஹார்மோன்கள்

## தாவர ஹார்மோன்கள்

| 1. ஆக்சின்கள் | 2. சைட்டோகைனின் | 3. ஜிப்ரல்லின்கள் | 4. அப்சிசிக் அமிலம்(ABA) | 5. எத்திலின் |
|---|---|---|---|---|
| • தண்டு நீட்சி.<br>• நுனி ஆதிக்கம்<br>• வேர் உருவாதள்<br>• கருவுறாக்கனி<br>• உதிர்தலைத் தடுக்கிறது. | • செல் பகுப்பு<br>• செல் நீட்சியடைதல்<br>• உருவத்தோற்றவியல்<br>• பக்கவாட்டு மொட்டின் வளர்ச்சி<br>• ரிச்மாண்ட் லாங்க் விளைவு | • கணுவிடைப்பகுதி நீட்சி<br>• போல்டிங்<br>• ஆண் மலர் தோன்றுவது.<br>• உறக்க நிலை நீக்குதல்.<br>• விதைகளற்ற கனிகள் | • உதிர்தலை ஊக்குவித்தல்<br>• இலைத்துளை மூடுவது.<br>• இலைகள் மூப்படைவது<br>• மொட்டு உறக்கம் தூண்டுதல்<br>• பக்கவாட்டு மொட்டின் வளர்ச்சியைத் தடைசெய்யும் | • கனிகள் பழுத்தல்.<br>• நீட்சியை தடுக்கிறது<br>• மூப்படைவதை விரைவுப்படுத்துதல்.<br>• உதிர்தலை தூண்டுதல்.<br>• உறக்கத்தை நீக்குதல். |

## மனித நாளமில்லாச் சுரப்பி மண்டலம்

**பிட்யூட்டரி சுரப்பி / ஹைப்போபைஸிஸ் / தலைமை சுரப்பி**

**முன்கதுப்புகள் சுரக்கும் (அடினோஹைப்போபைசிஸ்):** 1. வளர்ச்சி ஹார்மோன் (GH) 2. தைராய்டைத் தூண்டும் ஹார்மோன் (TSH) 3.அட்ரினோ கார்ட்டிக்கோட்ராபிக் ஹார்மோன்(ACTH) 4.கொனாடோட்ராபிக் ஹார்மோன்(GTH) 5.புரோலாக்டின்(PRL)/லாக்டோஜனிக்ஹார்மோன்

**பின்கதுப்புகள் சுரக்கும் (நியூரோஹைப்போபைஸிஸ்):** 1.வாசோபிரஸ்ஸின்/ஆன்டிடையூரிட்டிக் ஹார்மோன்(ADH) 2.ஆக்ஸிடோசின்

| | |
|---|---|
| **தைராய்டு சுரப்பி** | **அ) ட்ரைஅயோடோ தைரோனின் (T3):** வளர்சிதை மாற்றவீதம் (BMR)> உடல் வெப்பநிலை மற்றும் மைய நரம்பு மண்டலம் ஆகியவற்றை பராமரிக்கிறது.<br>**ஆ) டெட்ராஅயோடோ தைரோனின்/தைராக்சின் (T4):** உடல் வளர்ச்சி, எலும்பு உருவாக்கம் கட்டுப்படுத்தல். |
| **பாராதைராய்டு சுரப்பி** | கால்சியம் & பாஸ்பரஸ் வளர்சிதை மாற்றத்தை ஒழுங்குப்படுத்தல். இரத்த கால்சியம் அளவை பராமரித்தல். |
| **கணையம் (லாங்கர்ஹான் திட்டுகள்)** | **இன்சுலின்:** குளுக்கோஸை கிளைக்கோஜனாக மாற்றி செல்களுக்குள் குளுக்கோஸ் செல்வதை ஊக்குவிக்கிறது.<br>**குளுக்கோகான்:** கல்லீரலில் கிளைக்கோஜன் குளுக்கோஸாக மாற்றம் அடைய உதவுகிறது. |
| **அட்ரினல் சுரப்பி / சிறுநீரக மேற்சுரப்பிகள்** | **அட்ரினல் கார்டெக்ஸ் ஹார்மோன்கள்:** • **கார்ட்டிசோல் & கார்ட்டிகோஸ்டிரான்** (சோனா பாஸிகுலேட்டாவில்)<br>• **ஆல்டோஸ்டிரான்** (சோனா குளாமருலோசாவால்)<br>**அட்ரினல் மெடுல்லா: எபிநெஃப்ரின் (அட்ரினலின்) & நார் எபிநெஃப்ரின் (நார் அட்ரினலின்)** |
| **இனப்பெருக்கச் சுரப்பிகள்** | **விந்தகம்(ஆண்): டெஸ்டோஸ்டிரான்–** விந்து உற்பத்தியில் உதவுகிறது, இரண்டாம்நிலை பால்பண்புகளை வளர்க்கிறது<br>**அண்டகம் (பெண்): ஈஸ்ட்ரோஜன்–** பருவமடை மாற்றம், அண்டசெல் உருவாக்குதல், இரண்டாம்நிலை பால்பண்புகள்<br>**புரோஜெஸ்ட்ரான்:** முன்மாதவிடாய் மாற்ற காரணம், கர்ப்ப கால பராமரிப்பு, தாய்-சேய் இணைப்புத்திசு உருவாதல். |
| **தைமஸ் சுரப்பி** | **தைமோசின்:** நோய் தடைக்காப்புமண்டல செயல்பாடு தூண்டுதல், லிம்ஃபோசைட்டு உருவாதல் & வேறுபடுதல். |

| சுரப்பிகள் | மனித ஹார்மோன்களின் குறைபாடுகள் | தாவர ஹார்மோன்கள் |
|---|---|---|
| **பிட்யூட்டரி** | **வளர்ச்சி ஹார்மோன்:** • **குள்ளத்தன்மை:** குழந்தைகளில் இது குறைவாக சுரத்தல்.<br>• **அசுரத்தன்மை:** குழந்தைகளில் இது அதிகமாக சுரத்தல்.<br>• **அக்ரோமெகலி:** பெரியவர்களில் இது அதிகமாக சுரத்தல்.<br>**ADH குறைபாடு - டயாபடீஸ் இன்சிப்டஸ்:** அதிக சிறுநீர் வெளியேற்றுதல் | **ஆக்சின்களின் வகைகள்:**<br>i) இயற்கை ஆக்சின்கள்: எ.கா: IAA<br>ii) செயற்கை ஆக்சின்கள்: எ.கா: IBA<br>**வளர்ச்சி ஊக்கிகள்:** ஆக்சின், சைட்டோகைனின் & ஜிப்ரல்லின் |
| **தைராய்டு** | **ஹைப்போதைராய்டிசம்:** குறைவான தைராய்டு ஹார்மோன்கள் சுரப்பு.<br>• **காய்ட்டர்:** உணவில் அயோடின் குறைவதால் ஏற்படும். கழுத்து வீங்குதல்.<br>• **கிரிட்டினிசம் (குழந்தைகள்) :** குள்ளத்தன்மை, குறைவான மனவளர்ச்சி.<br>• **மிக்ஸிடிமா (பெரியவர்கள்) :** முகம் உப்பிய (அ) வீங்கிய தோற்றம்.<br>**ஹைபர்தைராய்டிசம்:** தைராய்டு ஹார்மோன் அதிகரிப்பு - **கிரேவின் நோய்** | **வளர்ச்சி அடக்கிகள்:**<br>அப்சிசிக் அமிலம் & எத்திலன்<br>**தாவர ஹார்மோன்களின் மற்ற பெயர்கள்:**<br>மன அழுத்த ஹார்மோன்-அப்சிசிக் அமிலம்<br>வாயு தாவர ஹார்மோன் - எத்திலன் |
| **பாராதைராய்டு** | பாராதைராய்டு அகற்றுதல் ⇒ பாராதர்மோன் குறையும்<br>• **டெட்டனி :** தசை இறுக்கம். | |
| **கணையம்** | **டயாபடீஸ் மெலிடஸ்:** குறைவான இன்சுலின் சுரத்தல்<br>• **ஹைபர்கிளைசீமியா–** இரத்த சர்க்கரை அதிகரித்தல்.<br>• **கிளைக்கோசூரியா–** சிறுநீரில் அதிக குளுக்கோஸ் வெளியேறுதல்<br>• **பாலியூரியா** – அடிக்கடி சிறுநீர் கழித்தல்<br>• **பாலிடிப்சியா** – அடிக்கடி தாகம் எடுத்தல்<br>• **பாலிஃபேஜியா** – அடிக்கடி பசி எடுத்தல் | |

**மனிதரில் உள்ள சில ஹார்மோன்களின் பிற பெயர்கள்:**

★ ஆளுமை ஹார்மோன் – தைராய்டு ஹார்மோன்
★ ஆன்டிடையூரிட்டிக் ஹார்மோன் – வாசோபிரஸ்ஸின்
★ லாக்டோஜெனிக் ஹார்மோன் – புரோலாக்டின்
★ உயிர் காக்கும் ஹார்மோன் – கார்ட்டிசோல்
★ காலத் தூதுவர்கள் – மெலட்டோனின்
★ அவசர கால ஹார்மோன் – அட்ரினலின் & நார் அட்ரினலின்
★ இனப்பெருக்க ஹார்மோன்: ஆண் - டஸ்டோஸ்டிரான்
பெண் - ஈஸ்ட்ரோஜன் & புரோஜெஸ்டிரான்

Way to Success

## 17. தாவரங்கள் மற்றும் விலங்குகளில் இனப்பெருக்கம்

### தாவரங்களின் இனப்பெருக்கம்

❋ **உடல இனப்பெருக்கம்:** புதிய தாவரங்கள், தாவரத்தின் உடல செல்களிலிருந்து தோன்றுதல்.
• இலை • வேர் • துண்டாதல் • இழப்பு மீட்டல் • குமிழம் • பிளத்தல் • தண்டு • மொட்டுவிடுதல்

❋ **பாலிலா இனப்பெருக்கம்:** ஒரே ஒரு தாய்த்தாவரத்திலிருந்து புதிய தாவரம் தோன்றும் முறை ***எ.கா:*** பூஞ்சை

❋ **பாலினப்பெருக்கம்:** கேமீட்டுகள் (ஆண் மற்றும் பெண்) இணைந்து தன்னை ஒத்த புதிய தாவர்தை உருவாக்குதல்.
**1. மகரந்தச் சேர்க்கை:** i) தன் மகரந்தச்சேர்க்கை ***எ.கா:*** ஹைபிஸ்கஸ் ii) அயல்மகரந்தச்சேர்க்கை ***எ.கா :*** ஆப்பிள்
**2. தாவரங்களில் கருவுறுல்:** சூற்பையைத் தூண்டி, கனியை உருவாக்குகிறது.

### மனிதரில் பால் இனப்பெருக்கம் (விந்தணுவாக்கம் + அண்டவணுவாக்கம்)

- **முதல்நிலை பால் உறுப்புகள்:** ஆண் - விந்தகம் & பெண் - அண்டகம்
- **இரண்டாம் நிலை/துணை பால் உறுப்புகள்:** பெண்- பெலோப்பியன் நாளம், கருப்பை, செர்விக்ஸ், புணர் குழாய்
ஆண்- விந்துக்குழல், எபிடிடைமிஸ், விந்துப்பை, புராஸ்டேட் சுரப்பி, ஆண்குறி
- **<u>மாதவிடாய் சுழற்சி: 28 நாட்கள்</u>**
  1) மாதவிடாய் /அழிவு நிலை: 4–5 நாட்கள்
  2) பாலிக்குலார்/பெருக்க நிலை: 6–13 நாட்கள்
  3) அண்டம் விடுபடும் நிலை: 14ஆம் நாள்
  4) லூட்டியல்/உற்பத்தி நிலை: 15–28 நாட்கள்
- **பூப்படைதல்:** மாதவிடாய் சுழற்சி ஆரம்பித்தல்(11-13 வயது) **மாதவிடைவு:** மாதவிடாய் சுழற்சி முடிவடைதல்(48-50 வயது).

❋ **கருவுறுதல் முதலான கருவின் வளர்ச்சி:** i) கருவுறுதல் ii) பிளத்தல் iii) பதித்தல் iii) கேஸ்ட்ருலாவாக்கம் iv) உறுப்பாக்கம் v)தாய்சேய் இணைப்புத்திசு vi)உருவாக்கம் vii)கர்ப்பகாலம் viii)குழந்தை பிறப்பு ix)பாலூட்டுதல்(முதல் பால்-கொலஸ்ட்ரம்)

## 18. மரபியல்

❋ **ஒரு பண்பு கலப்பு:** ஒரு பண்பின் இருமாற்றுத் தோற்றங்களுக்கிடையில் ஏற்படும் இனக்கலப்பு.

❋ **இரு பண்பு கலப்பு:** இரண்டு இணை எதிரெதிரான பண்புகளைப் பற்றிய இனக்கலப்பு.

❋ **குரோமோசோம்கள்:** ஒவ்வொரு செல்லின் உட்கருவிலும் நூல் போன்ற அமைப்புகள் குரோமோசோம்கள்.

❋ **டி ஆக்ஸி ரைபோ நியூக்ளிக் அமிலம் (டி.என்.ஏ):** மில்லியன் நியூக்ளியோடைடுகளை உள்ளடக்கிய பாலி நியூக்ளியோடைடு.
- **ஒற்றை மய செல்கள்**- ஒரு குரோமோசோம் தொகுப்பு
- **இரு மய செல்கள்** - குரோமோசோம்கள் ஜோடி

நியூக்ளியோடைடு = நியூக்ளியோசைடு + பாஸ்பேட்
⇩
நைட்ரஜன் காரம் + சர்க்கரை
⇩ ⇩
பியூரின்கள் – அடினைன் & குவானைன்
பிரிமிடின்கள் – சைட்டோசின் & தைமின்
டி ஆக்சிரைபோஸ் சர்க்கரை

❋ **பாலின நிர்ணயம்:** கருவுற்ற முட்டை, ஆண்/பெண் ஆக வளர்வது.
- **ஆட்டோசோம்கள்:** உடல் பண்புகளை நிர்ணயிக்கும் ஜீன்
- **அல்லோசோம்கள்/ பால் குரோமோசோம்கள்**(X & Y):
***ஆண்*** - (ஒரு X & ஒரு Y) ***பெண்*** - (இரண்டு X )

❋ **சடுதிமாற்றம்:** பரம்பரையாகத் தொடரக்கூடிய, ஓர் உயிரியின் மரபுப்பொருளில்(DNA) திடீரென ஏற்படும் மாற்றம்.
**i) குரோமோசோம் அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள்:** **ii) ஜீன்/புள்ளி சடுதிமாற்றம்:**

## 19. உயிரின் தோற்றமும் பரிணாமமும்

❋ **லாமார்க்கியம்:** ➤ உள்ளார்ந்த முக்கிய வல்லமை ➤ சூழ்நிலையும் புதிய தேவைகளும்
➤ பயன்பாடு மற்றும் பயன்படுத்தாமை கோட்பாடு ➤ மரபுவழியாகப் பெறப்பட்ட பண்புகள்

❋ **டார்வினியம் (அ) இயற்கைத் தேர்வு கோட்பாடு** : i) அதிக இனப்பெருக்கத்திறன் ii) வாழ்க்கைக்கான போராட்டம் iii) வேறுபாடுகள் iv) தக்கன உயிர் பிழைத்தல் (அ) இயற்கைத் தேர்வு v) சிற்றினங்களின் தோற்றம்

❋ **உயிரினங்களின் தோற்றம்:** ➤ சிறப்புத் தோற்றக் கோட்பாடு ➤ சுய படைப்புக் கோட்பாடு (உயிரிலிப் பிறப்பு)
➤ உயிர்ப் பிறப்புக் கோட்பாடு ➤ காஸ்மிக் தோற்றம் ➤ உயிர்களின் வேதிப் பரிணாமம்

➤ **அமைப்பு ஒத்த உறுப்புகள்:** பார்க்க வெவ்வேறாக, வெவ்றே பணிகள், ஒரே மாதிரி தோற்றம். ***எ.கா:*** மனித கை, பூனையின் முன்னங்கால்.

➤ **செயல் ஒத்த உறுப்புகள்:** பார்க்க ஒரே மாதிரி, ஒரே மாதிரி பணிகள். வெவ்வேறு தோற்றம். ***எ.கா:*** வௌவால் & பறவை இறக்கைகள்.

➤ **எச்ச உறுப்புகள்:** வளர்ச்சி குன்றிய மற்றும் இயங்காத நிலையில் உள்ள உறுப்புகள் ஆகும். ***எ.கா :*** குடல்வால்

➤ **முன்னோர் பண்பு மீட்சி:** மூதாதையர் பண்புகள் மீண்டும் தோன்றுதல். ***எ.கா:*** பிறந்த குழந்தைகளில் காணப்படும் வளர்ச்சியற்ற வால்.

❋ **வேறுபாடுகள்:** i) உடலசெல் வேறுபாடு ii) இனசெல் வேறுபாடு (தொடர்ச்சியான/நிலையற்ற & தொடர்ச்சியற்ற வேறுபாடுகள்)

❋ **படிவமாதல்:** பாறைகளில் புதை உயிர்ப் படிவங்கள் உருவாதல். ***எ.கா:*** கதிரியக்கக் கார்பன்($C^{14}$) காலஅளவு முறை

❋ **தொல்லுயிரியல்:** புதைப்படிவங்கள் பற்றிய படிப்பு. ❋ **தொல் தாவரவியல்:** பூமியில் புதைந்த தாவரங்கள் பற்றி அறிதல்

❋ **ஆர்க்கியாப்டெரிக்ஸ்:** பழங்காலப் புதைபடிவப் பறவை, ஊர்வன & பறவைகளுக்கு இடையேயான இணைப்பு உயிரி.

❋ **வட்டார இனத் தாவரவியல்:** தாவரங்கள் அப்பகுதி மக்களுக்கு வழி வழியாக எவ்வாறு பயன்படுகிறது என்று அறிதல்.

❋ **வான்/புற மண்டல உயிரியல்:** உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி பற்றிய படிப்பு

❋ **தொகுதியின் வளர்ச்சி நிலை:** உயிரினத்தின் பரிணாம வரலாறு.

❋ **தனி உயிரி வளர்ச்சி நிலை:** உயிரினத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி.

❋ **சிறிய உயிரி:** சிறிய உயிரிகள் மிகக் கடுமையான சூழலைத் தாங்கும் இயல்பு கொண்டவையாக இருக்கலாம்.

Way to success

## 20. இனக்கலப்பு மற்றும் உயிரித்தொழில்நுட்பவியல்

### தாவரப்பயிர்ப் பெருக்கம்

✓ அதிக மகசூல் மற்றும் உயர் தரத்திற்கான பயிர்ப்பெருக்கம் *எ.கா: ஐ ஆர் – 8* (அதிசய அரிசி)
✓ நோய் எதிர்ப்புத் திறனுக்கான பயிர்ப்பெருக்கம். *எ.கா: ஹிம்கிரி*
✓ பூச்சிகள் அல்லது தீங்குயிரிகள் எதிர்ப்புத் திறனுக்கான பயிர்ப்பெருக்கம் *எ.கா: பூசா கவுரவ்*
✓ மேம்பட்ட ஊட்டச்சத்து தரத்திற்கான பயிர்ப்பெருக்கம் *எ.கா: புரோட்டினா*

1. புதிய வகைத் தாவரங்களின் அறிமுகம் 2. தேர்வு செய்தல் (கூட்டுத்தேர்வு, தூய வரிசைத்தேர்வு, குளோனல் தேர்வு)
3. பன்மய பயிர்ப்பெருக்கம் 4. சடுதிமாற்ற பயிர்ப்பெருக்கம் 5. கலப்பினமாக்கம்

✱ ***உயிருட்டச்சத்தேற்றம்:*** விரும்பத்தக்க ஊட்டச்சத்துக்கள் நிறைந்த பயிர் தாவரங்களை உற்பத்திச் செய்தல்.

### விலங்கினப் பெருக்கம்

✱ ***உட்கலப்பு:*** ஒரே இனத்தைச் சார்ந்த உயிரனங்களை 4-6 தலைமுறைகளுக்கு கலப்புச் செய்தல். ***எ.கா:*** *ஹிஸ்ஸர்டேல்*
✱ ***வெளிக்கலப்பு :*** தொடற்பற்ற விலங்குகளைக் கலப்புச் செய்தல். ***எ.கா:*** *கோவேறு கழுதை.*
✱ ***ஹெட்டிரோசிஸ்/ கலப்பின வீரியம்:*** உயர்தரப் பண்புகளை உடைய கலப்பினங்களை உற்பத்தி செய்தல்.
✱ **ஜீன் குளோனிங்:** இது மரபொத்த உயிரிகளை பிரதிகளாக உற்பத்தி செய்யும் முறையாகும்.
✱ **ஜீன் சிகிச்சை: வகைகள்:** i) உடல் செல் ஜீன் சிகிச்சை ii) கருநிலை அல்லது இனசெல் ஜீன் சிகிச்சை
✱ **குருத்தணுக்கள்:** மாறுபாடு அடையா/சிறப்பு செல்களாக மாறா செல்கள். **வகை:** கருநிலை & முதிர்/உடல குருத்தணுக்கள்
✱ **மரபுப் பண்பு மாற்றப்பட்ட உயிர்கள்:** ***எ.கா:*** தாவரங்கள்- கோல்டன் ரைஸ், விலங்குகள்- அயல் ஜீனைப் பெற்ற செம்மறி ஆடு.

## 21. உடல் நலம் மற்றும் நோய்கள்

✱ **மனோவியல் மருந்துகள்:** மூளை மீது செயல்பட்டு, அதன் செயல்பாடுகளை மாற்றியமைக்கின்றன.
✱ **மனநிலை மாற்றும் மருந்துகள்:** உணர்வறி நிலை, சிந்திக்கும் திறன், அறிநிலை

### வாழ்க்கை முறை மாற்றங்கள் காரணமாக ஏற்படும் நோய்கள் மற்றும் கோளாறுகள்

✱ **டயாபடீஸ் மெல்லிடஸ்(நீரழிவு நோய்):** இன்சுலின் செயல்பாடு குறை (அ) சுரக்காமை ஆகியவற்றால் அதிகரிக்கும் இரத்த குளுக்கோஸ்.
- வகை-1 இன்சுலின் சார்ந்த நீழிவு நோய் (IDDM) • வகை-2 இன்சுலின் சாராத நீழிவு நோய் (NIDDM)

✱ **உடல் பருமன்:** அதிக கொழுப்பு சேர்வால் உடலின் எடை அதிகரிப்பது. **உடற்பருமக் குறியீடு** (BMI) = எடை(கிகி)/உயரம்($மீ^2$)
✱ **இதய நோய்கள்:** இதயம் மற்றும் கரோனரி இதய நோய்
✱ **புற்றுநோய்:** கட்டுப்பாடற்ற, அபரிமிதமான செல்பிரிதல். கட்டி/நியோபிளாசத்தை உருவாக்கி திசுக்களை அழிக்கிறது.
- **மெட்டாஸ்டாசிஸ்:** புற்று செல்கள் உடலின் தொலைவிலுள்ள பாகங்களுக்கும் இடம் பெயர்ந்து புதிய திசுக்களை அழிக்கும் நிகழ்வுகள் • **ஆன்காலஜி** : புற்றுநோயைப் பற்றிய படிப்பு
- **வகைகள்:** 1) கார்சினோமா 2) சார்கோமா 3) லியூக்கேமியா
- **கார்சினோஜென்கள்** – இவை புற்றுநோயை உண்டாக்கும் காரணிகள்.

✱ **எய்ட்ஸ்:** மனித தடைகாப்பு குறைவு வைரஸால் (ர்ஐஏ) ஏற்படுத்தப்படும் ஒரு கொடிய நோயாகும்.
- **கண்டறில் :** வெஸ்டர்ன் பிளாட் (அ) எலைசா (ELISA-Enzyme Linked Immuno Sorbent Assay)

## 22. சுற்றுச்சூழல் மேலாண்மை

✱ ***காடுகள் அழிக்கப்படுதல்:*** காட்டுப் பகுதிகள் அழிக்கப்படுவது. ***மரம் வளர்ப்பு:*** மரக்கன்றுகளை நடுவது & பாதுகாப்பது.
- **சிப்கோ (அ) தழுவுதல் இயக்கம்:** சாமோலி, உத்திரப்பிரதேசம் மாநிலத்தில்

✱ **மண்ணரிப்பு:** • ***காரணிகள்:*** அதிவேகமாக வீசும் காற்று, பெருவெள்ளம், நிலச்சரிவு, மனிதரின் நடவடிக்கைகள் மற்றும் கால்நடைகளின் அதிக மேய்ச்சல்.
✱ **புதுப்பிக்க இயலாத ஆற்றல் வளங்கள்:** குறைந்த காலத்தில் தம்மைத்தாமே புதுப்பித்துக்கொள்ள முடியாது. மூலத்திலிருந்து பெறப்படும் ஆற்றல் எ.கா: நிலக்கரி, பெட்ரோலியம்.
***எ.கா :*** பெட்ரோலியம் , நிலக்கரி மற்றும் இயற்கை வாயு.
✱ **புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள்:** குறுகிய காலத்தில் புதுப்பித்துக் கொள்ளக் கூடியதும் மற்றும் ஆற்றலை தொடர்ச்சியாக பெறும்படியும் உள்ள மூலங்களாகும்.
✱ **எ.கா :** புவிவெப்ப ஆற்றல், நீராற்றல், சூரிய ஆற்றல் மற்றும் காற்றாற்றல்.
✱ **மழைநீர் சேகரிப்பு :சேமிக்கும் முறைகள் :** மேற்கூரைகளில் விழும் மழைநீரை சேமித்தல், கசிவு நீர்க்குழிகள், ஏரிகள் அமைத்தல், ஊரணிகள்.
✱ **மின்னணுக் கழிவுகள்: மூலங்கள் :** கணினிகள், கால்குலேட்டர்கள், குளிர்சாதனப்பெட்டிகள் மற்றும் மின்கலன்கள்.
✱ **கழிவுநீர் மேலாண்மை:** வடிகட்டுதல், காற்றேற்றம், வீழ்படிவு செயல் முறை படிவு, அகற்றுதல், கிருமி நீக்குதல், நீர் மறுசுழற்சி
✱ **கழிவுநீர் மேலாண்மை:** i) தனித்துப்பிரித்தல் ii) நிலத்தில் பரப்புதல் iii) எரித்து சாம்பலாக்குதல் iv) உரமாக்குதல்
✱ **4R முறை :** குறைத்தல்(Reduce), மறுபயன்பாடு(Reuse), மீட்டெடுத்தல்(Recovery), மறுசுழற்சி(Recycle).

Way to Success

## அறிஞர்களும் அறிவியல் கண்டுபிடிப்புகளும்

| கண்டுபிடிப்புகளின் தந்தை | | விதிகள் | |
|---|---|---|---|
| லியோனார்டோடா வின்சி | தொல்லுயிரியல் | நியூட்டன் | இயக்க விதி |
| கஸ்பர் மரியா வான் ஸ்டெர்ன்பெர்க் | தொல்தாவரவியல் | ஸ்னெல் | ஒளிவிலகல் விதி |
| பீர்பால் சகனி | இந்திய தொல்லுயிரியல் | சாடி & ∴பஜன் | இடம்பெயர்வு விதி |
| தாமஸ் அடிசன் | என்டோகிரைனாலஜி | ஹென்றி மாஸ்லே | நவீன ஆவர்தன விதி |
| நெகமய்யா க்ரூ | தாவர உள்ளமைப்பு | பாயில், சார்லஸ் அவகேட்ரோ | வாயுக்களின் அடிப்படை விதிகள் |
| வில்லியம் ஹார்வி | உடலியல் | ராலே, மீ, டிண்டால், ராமன் | ஒளிச்சிதறல் விதி |
| கிரிகர் ஜோகன் மெண்டல் | மரபியல் | | |
| Dr. நார்மன் E. போர்லாக் | பசுமைப் புரட்சி | ஆல்பர்ட் ஐன்ஸ்டின் | நிறை ஆற்றல் சமன்பாடு |

| கண்டுபிடிப்புகள் | | அறிமுகப்படுத்தப்பட்டது / முதன்முதலில் சொல்லை உருவாக்கியது | |
|---|---|---|---|
| மேரி க்யூரி | ரேடியம் | கால் மற்றும் ஹாஜன் ஸ்மித் | ஆக்ஸின்கள் |
| மார்ட்டின் கிலாபிராத் | யுரேனியம் | W.M.பேய்லிஸ்&E.H. ஸ்டார்லின் | ஹார்மோன் |
| ஹென்றி பெக்கொரல் | இயற்கை கதிரியக்கம் | வால்டேயர் | குரோமோசோம் |
| ஐரின் கியூரி | செயற்கை கதிரியக்கம் | J.W. ஹார்ஸ்பெர்கர் | வட்டார இன தாவரவியல் |
| W.F. லிபி | கதிரியக்க கார்பன் முறை | ஜார்ஜ் சைமன் ஓம் | மின்னோட்டம் மற்றும் மின்னழுத்த வேறுபாடு ஆகியவற்றிற்கான தொடர்பு |
| ராபின் ஹில் | ஒளி சார்ந்த வினை | **இரத்தம் தொடர்பான கண்டுபிடிப்புகள்** | |
| ஹிஸ் | ஏட்ரியோ வெண்ட்ரிகுலர் கற்றை | காரல் லேண்ட்ஸ்டீனர் | A, B & O இரத்த வகைகள் |
| ∴ப்ரெட்ரிக், சார்லஸ் பெஸ்ட், மெக்லாட் | மனித இன்சுலின் | டிகாஸ்டெல்லோ, ஸ்டெய்னி | AB இரத்த வகைகள் |
| | | லேண்ட்ஸ்டீனர் & வியன்னர் | Rh காரணி |

**மற்றவை**

| | |
|---|---|
| அரிஸ்டாட்டில் | இயற்கையான இயக்கம் மற்றும் இயற்கைக்கு மாறான இயக்கம் |
| கலிலியோ | நிலைமம் மற்றும் இயக்கம் |
| ஜோகன் லிப்ரஷே | முதல் தொலைநோக்கி |
| டாக்டர் ஹோமி ஜஹாங்கிர் பாபா | இந்திய அணுசக்தி ஆணையத்தின் முதல் தலைவர். |
| ∴பிரிட்ஸ் வார்மால்ட் வெண்ட் | தாவரங்களில் ஆக்சின் இருப்பதையும், அதன் விளைவுகளையும் கண்டறிந்தார். |
| எட்வர்ட் C. கெண்டல் | தைராக்சின் ஹார்மோனை படிக நிலையில் தனித்துப் பிரித்தார். |
| சார்லஸ் ஹாரிங்டன் & ஜார்ஜ் பார்ஜர் | தைராக்சின் ஹார்மோனின் மூலக்கூறு அமைப்பு |
| ஜேம்ஸ் வாட்சன் & ∴பிரான்சிஸ் கிரிக் | டி.என்.ஏ வின் முப்பரிமாண அமைப்பு |
| எர்வின் சார்கா∴ப் | அடினைன் = தைமிடின், குவானைன் = சைட்டோசின் விகிதம் சமமாகும். |
| சாக்ஸ் | தாவரங்களில் உள்ள திசு தொகுப்புகளை மூன்று வகைகளாக வகைப்படுத்தியவர். |
| மெல்வின் கால்வின் | ஒளிச்சேர்க்கையின் வேதியியல் நிகழ்வுகள் |
| C.N.R. ராவ் | செயற்கை ஒளிச்சேர்க்கை நிகழ்ச்சி மூலம் ஹைட்ரஜன் எரிபொருளை உற்பத்தி செய்தார். |
| குருசோவா | நெல் பயிரில் பக்கானே நோய் அல்லது கோமாளித்தன நோயை கண்டறிந்தார். |
| Dr. சுனிதி சால்மோன் | இந்தியாவின் HIV ஆராய்ச்சி மற்றும் சிகிச்சையின் முன்னோடி |
| ஜீன் பாப்டிஸ்ட் லாமார்க் | பயன்பாடு மற்றும் பயன்படுத்தாமைக் கோட்பாடு |
| சார்லஸ் டார்வின் | இயற்கை தேர்வு கோட்பாடு |
| ஓபாரின் மற்றும் ஹால்டேன் | வேதி வினைகள் மூலமாக உயிர் தோன்றியது என்ற கருத்தை முன்மொழிந்தனர். |
| எர்னஸ்ட் ஹெக்கல் | உயிர்வழித் தோற்ற விதி அல்லது வழிமுறைத் தொகுப்பு கொள்கை |
| லூயிஸ் பாஸ்டர் | உயிரியில் இருந்துதான் உயிர் தோன்றியது. |

Way to Success